**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No. 323/2017 |
| Deposition of witness | PW- 4 /LW- 5 |
| Name | திரு. சரவணன் |
| Father's Name | திரு. கணேசன் |
| Village | கீழக்குறிச்சி |
| Taluk | பட்டுக்கோட்டை |
| Age | 62/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day of July 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி Bench Clerk Grade III என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற காவலர் திரு.வீரப்பிரகாஷ் 1990 என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழக்குறிச்சி கிராமத்தில் குடியிருந்து Printing Press-ல் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள என்னுடையது அல்ல. போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், கடந்த 26.12.2016 அன்று காலை 11.00 மணியளவில் நானும், சக்திவேலும் பேசிக்கொண்டிருந்தபோது போலிஸார் பிரவீன்குமாரை ரவிச்சந்திரன் தரப்பினர் தகராறு செய்தது தொடர்பாக எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம், பார்வை மகசர் தயார் செய்து அதில் நான் சாட்சி கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரியை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில்

எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை